A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 16 / 2024**

திரு AR.பழனியப்பன்,
D1 Block, கதவு எண் 397,
திருச்சி சுவாமிகள் அவென்யூ,
செக்கலை ரோடு, காரைக்குடி – 630 001,
சிவகங்கை மாவட்டம்.

………மேல்முறையீட்டாளர்
(திரு AR.பழனியப்பன்)

எதிர்

1. செயற்பொறியாளர்/ பகிர்மானம்/காரைக்குடி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், கழனிவாசல், காரைக்குடி – 630 702.

2. உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/நகர்/காரைக்குடி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், கழனிவாசல், காரைக்குடி – 630 702.

. . . எதிர்மனுதாரர்கள்
(திருமதி M. லதா தேவி, செயற்பொறியாளர்/ பகிர்மானம்/காரைக்குடி
திரு P. புவனேஷ்வரி, உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/நகர்/காரைக்குடி)

**மனு பெறப்பட்ட நாள்: 18-03-2024**

**கேட்புரை நாள்: 08-05-2024**

**ஆணை நாள்: 14-05-2024**

18.03.2024 அன்று பெறப்பட்ட திரு AR.பழனியப்பன், D1 Block, கதவு எண் 397, திருச்சி சுவாமிகள் அவென்யூ, செக்கலை ரோடு, காரைக்குடி – 630 001, சிவகங்கை மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 16/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை

09.05.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

குறைவழுத்த மின்சாரம் காரணமாக தனது வீட்டில் உள்ள மின் சாதனங்கள் பழுதடைந்ததால் இழப்பீடு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 குறைவழுத்த மின்சாரம் காரணமாக மின்தடை ஏற்பட்டு தனது வீட்டில் உள்ள மின் சாதனங்கள் பழுதடைந்ததால் இழப்பீடு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மனுதாரர் மின்தடை என குறிப்பிட்டுள்ள இரண்டு நாட்களில் காரைக்குடி பகுதியில் இடியுடன் கூடிய தொடர் மழை காரணமாக அப்பகுதியில் ஏற்கனவே சென்று கொண்டிருக்கும் உயர் அழுத்த மின் பாதைக்கு சற்று தள்ளி உள்ள மரக்கிளைகள் மழை மற்றும் காற்றினால் மின்பாதையில் பட்டதால் மின்தடை ஏற்பட்டதாகவும், உடனடியாக மின்பாதை களப்பணி செய்து இடையூராக இருந்த மரக்கிளை வெட்டி அப்புறப்படுத்தப்பட்டதாலும், இதற்கான மின்மாற்றி பொது பராமரிப்பு செய்யப்பட்டதாலும் மின்சாரம் சீரானது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 மின் சாதனங்கள் பழுதடைந்ததால் ஏற்பட்ட இழப்பீட்டிற்கு இழப்பீடு வேண்டி மேல்முறையீட்டாளர் சிவகங்கை மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 02.12.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சிவகங்கை மின்பகிர்மான வட்டம் 17.02.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 மன்றத்தின் தீர்வு :**

3.1 சிவகங்கை மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 17.02.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *மேற்கண்ட வாதுரையிலிருந்து மனுதாரரின் மனு மற்றும் எதிர்மனுதாரர்களின் பதிலுரை மற்றும் வாதுரையின்படி இந்த மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் கீழ்க்கண்ட முடிவை இறுதி செய்கிறது.*
>
> *மனுதாரரின் கோரிக்கையான மின்னழுத்த குறைபாட்டினை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டி வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்மனுதாரர்கள் கடைபிடித்து தீர்ப்பின் படி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டுவிட்டது என்ற முறையீட்டினை மனுதாரரும் ஏற்றுக்கொண்டுள்ளார்.*
>
> *மனுதாரர் இம்மன்றத்தில் தெரிவித்த உரிய இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும் என்ற கருத்திற்கு மனுதாரர் இணைப்பு செய்யப்பட்டுள்ள மின் இணைப்பில் ஏற்பட்ட மின்னழுத்தக் குறைபாட்டினால்தான் மின் உபகரணங்கள் பழுது ஏற்பட்டது என தெரிவித்தார். மின் உபகரணங்கள் பழுது தொடர்பாக பழுதினை உறுதிபடுத்தியதற்கான எந்த வித சான்றாவணங்களும் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை.*
>
> *எதிர்மனுதாரர்களின் வாதுரையிலிருந்து 24 மின்னிணைப்புகள் ஒரே இடத்தில் மின் வாய்ச்சட்டம் (Bus bar) வழியாக இணைக்கப்பட்டுள்ளது என்றும் 24 மின்னிணைப்புகளில் எந்த வித குறைந்த மின்னழுத்தம் ஏற்படவில்லை என்றும் வாதுரையில் தெரிவித்துள்ளனர். மேலும் மனுதாரரின் குடியிருப்பில் உள்ள மின்னளவிக்கு பின்னர் ஏற்பட்ட குறைபாடுகளின் காரணமாகவே மின் சாதனங்கள் பழுது ஏற்பட்டிருக்கலாம் என எதிர்மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.*
>
> *எதிர்மனுதாரர்களின் வாதுரையில் மின் கட்டமைப்பு, மின்பாதை, மின்கம்பம் மற்றும் உரிமைதாரர் (Owner) வளாகத்தில் பொருத்தப்படும் மின் அளவி வரை மட்டுமே உரிமதாரரின் (licensee) பொறுப்புடைமையாகும்.*
>
> *தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய பகிர்மான விதி தொகுப்பு 30 (1)ல் மின் அளவிக்கு பின்னால் இணைக்கப்பட்டுள்ள மின் பளு / மின் உபகரணங்கள் பராமரிப்பு உரிமைதாரரின் (Owner) பொறுப்புடைமையாகும் என்பதையும் கவனமுடன் பரிசீலனை செய்ய வேண்டும் என்பது நியாயமாக இருக்கும் என தோன்றுகிறது.*
>
> *மேற்காணும் சாராம்சங்களிலிருந்து மனுதாரர்கள் கோரிக்கையான மின்னழுத்த குறைபாட்டினை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டி வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்மனுதாரர்கள் கடைபிடித்து தீர்ப்பின் படி குறிப்பிட்ட கால*

*கெடுவிற்குள் புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டுவிட்டது என்ற முறையீட்டினை மனுதாரரும் ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதாலும் உரிமைதாரரின் வளாகத்தினுள் இணைக்கப்பட்டுள்ள மின்பளு உரிமைதாரரின் பொறுப்புடைமை என்பதாலும் மனுதாரர் கோரும் இழப்பீட்டு தொகையை வழங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என இம்மன்றம் உத்தரவு பிறப்பித்து இவ்வழக்கின் மீதான விசாரணையை இத்துடன் இறுதி செய்கிறது.*
*மேற்கண்ட முடிவுடன் இம்மன்றம் மனு எண்.56/2023 இறுதி செய்கிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.05.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு AR.பழனியப்பன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி M.லதா தேவி, செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ காரைக்குடி மற்றும் திரு P. புவனேஷ்வரி, உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/நகர்/ காரைக்குடி, சிவகங்கை மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 Low Power– ஆல் தனது பல மின்சார சாதனங்கள் பழுதடைந்ததாகவும், அவர்கள் வசிப்பது வாடகை வீடு எனவும், இதுபோன்ற மின்சார சாதனங்கள் பழுதடைவதால் மன உளைச்சலும் உண்டாகிறதாகவும், மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 Low voltage, Tube light tickering/fridge /mixie பழுதடைந்து உபயோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், எனவே, low voltage–ஆல் மின்சார சாதனங்கள் பழுது அடைந்து உபயோகிக்க முடியாத நிலை ஏற்பட்டதால் சேவை குறைபாடு இருப்பதாகவும் கீழ்காணும் இழப்பீட்டு தொகை வழங்க உத்தரவிடுமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| Refrigerator | : | 14,800 |
| Mixie | : | 2,800 |
| Tubelight | : | 750 |
| Wire & others | : | 175 |
| Labour charges | : | 400 |
| Postage | : | 190 |
| Mental agony caused | : | 20,000 |
| | | ------- |
| | | 39,115 |
| | | ------- |

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மனுதாரர் தன்னுடைய மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மின்இணைப்பு எண். 402–004 –1123 அமைந்துள்ள இடம் காரைக்குடி செக்காலை ரோட்டில் சுமார் 20–க்கு மேற்பட்ட பலஅடுக்கு மாடி குடியிருப்பு பகுதி ஆகும் என்றும், இந்த அடுக்கு மாடி குடியிருப்புக்கு உண்டான அனைத்து மின்இணைப்பிற்கும் குடியிருப்பு கீழ் பகுதியில் ஒரே இடத்தில் மின்வாய் சட்டம் (Bus Bar) மூலம் ஒரே கேபில் வழியாக வழங்கப்பட்டுள்ளதாகவும், அந்த Panel Board–ல் இருந்து அளித்த அனைத்து வீடுகளுக்கும் மின்இணைப்புக்கான மின் அளவி மூலம் மின்னோட்டம் வடிவமைக்கப்பட்டு வருவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இந்த சூழலில் மனுதாரர் தன்னுடைய மனுவில் குறைந்த மின்சாரம் மின்தடை என குறிப்பிட்டுள்ள இரண்டு நாட்களில் காரைக்குடி பகுதியில் இடியுடன் கூடிய தொடர் மழை காரணமாக அப்பகுதியில் ஏற்கனவே சென்று கொண்டிருக்கும் உயர் அழுத்த மின் பாதைக்கு சற்று தள்ளி உள்ள மரக்கிளைகள் மழை மற்றும் காற்றினால் மின் பாதையில் பட்டதால் மின்தடை ஏற்பட்டது கண்டறியப்பட்டதாகவும், உடனடியாக மின்பாதை களப்பணி செய்து இடையூராக இருந்த மரக்கிளை வெட்டி அப்புறப்படுத்தப்பட்டதாலும், இதற்கான மின்மாற்றி பொது பராமரிப்பு செய்யப்பட்டதாலும் மின்சாரம் சீரானது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேலும், இப்பகுதியில் கட்டுமானப்பணிகள் கூடுதலாக நடந்து வருவதால் வருங்கால தேவையும், நிகழ்கால தேவையும் கருத்தில் கொண்டு புதிய மின் மாற்றி அமைக்க மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு பணி முடித்து மின் மாற்றி அமைக்கப்பட்டு பழைய மின்மாற்றியில் இருந்த புதிய மின்மாற்றிக்கு மின்பளு பகிர்ந்து அளிக்கப்பட்டு பழைய மின்மாற்றியில் இருந்த மின்பளு 142 கி.வா 125 கி.வா ஆக தற்போது உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மின் இணைப்பு அமைந்துள்ள குடியிருப்பு வளாகத்தில் மற்ற வீடுகளில் மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் குறைவழுத்த மின்சாரத்தால் அவர்கள் வீடுகளில் எந்த மின்சாதனங்களும் பழுதாக வில்லை என்று அவர்களை விசாரித்ததில் தெரிவித்தார்கள் என்றும் மேலும், அந்த குடியிருப்பு வளாகத்தில் உள்ள ஐந்து மின் நுகர்வோர்கள் அளித்த கடிதத்தில் மழையினால் தான் மின்தடை ஏற்பட்டதே தவிர மற்ற நாட்களில் மின் தடையோ, குறைவழுத்த மின்சாரமோ ஏற்படவில்லை என்றும் சீரான மின்சாரம் வருகிறது எனவும், இதுவரை தங்கள் வீட்டில் உள்ள மின் சாதனங்கள் எந்த பாதிப்போ, பழுதோ, ஏற்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும், மனுதாரர் மற்றும் அந்த குடியிருப்பு வளாகத்தில் மற்ற மின்நுகர்வோர்கள் கணினி பதிவேடுகள் ஆய்வு செய்ததில் ஒரே மாதிரியான மின் நுகர்வு நடைபெற்றது தெள்ள தெளிவாக தெரிகிறது எனவும், மேலும் மனுதாரர் தெரிவித்துள்ள மின்இணைப்பு மற்றும் அந்த குடியிருப்பு வளாகத்தில் உள்ள மற்ற குடியிருப்புகளும் மின்வாய் சட்டம் மூலம் இணைக்கப்பட்டுள்ளதால் குறைவழுத்த மின்சாரத்தால் மின்சாதனங்கள் பழுதாகி இருந்தால் இந்த மின்வாய் சட்டத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ள மற்ற

இணைப்புகளில் உள்ள மின்சாதனங்களும் பழுதாகி இருக்க வேண்டும் என்றும், அவ்வாறான நிகழ்வுகள் ஏதும் நடைபெறவில்லை என்று மற்ற மின் நுகர்வோர் அளித்த வாக்கு மூலம் அடிப்படையில் தெரிய வருவதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும், இந்த குடியிருப்பு வளாகத்தில் உள்ள மற்ற ஐந்து வீடுகளின் மின் இணைப்பு எண்ணை வைத்து அலுவலக கணினி பதிவேட்டை ஆய்வு செய்து இது வரை சீரான நுகர்வு பதிவாகி உள்ளது தெரிய வருவதாகவும், எனவே, அலுவலக ஆவணங்கள் (Consumer Ledger) விசாரணை தகவல், மின் அளவிகள் பதிவிறக்க அறிக்கை, மின் நுகர்வோர் அளித்த வாக்கு மூலம் ஆகியவற்றின் அடிப்படையில் மின் விநியோக குறைப்பாட்டால் மனுதாரர் வீட்டிலுள்ள மின் சாதனங்கள் பழுதாகவில்லை என்று தெள்ள தெளிவாக தெரிய வருவதாகவும், மேலும், மனுதாரர் வீட்டில் உள்ள உள்கட்டமைப்பில் ஏற்பட்ட பழுதால் மட்டுமே மின்சாதனங்கள் பழுது ஏற்பட்டிருக்கலாம் எனவும், எனவே இந்த தகவல் அடிப்படையில் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மனுதாரர் தன்னுடைய வாதுரையில் குறைந்த மின் அழுத்தம் (low voltage) மற்றும் மின்தடை காரணமாக தன்னுடைய மின்சார சாதனங்கள் பழுதடைந்ததால் தன்னுடைய மின் சாதனங்கள் பழுதின் காரணமாக இழப்பீடு ரூ.39,115/-ம் மற்றும் சேவை குறைபாட்டிற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறும் மேல்முறையீடு செய்துள்ளார்.

7.3 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் மின் இணைப்பு எண் 402-004-1123 உடன் சேர்ந்து சுமார் 20 வீடுகளுக்கு மேற்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்கனவே இருந்த 200 KVA மின் மாற்றியிலிருந்து மின்சாரம் சீராக வழங்கப்பட்டு வந்ததாகவும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய மனுவில் கூறிய குறிப்பிட்ட மின்சாரம் மின்தடை என குறிப்பிட்ட நாட்கள் 15.03.2023 மற்றும் 17.03.2023 அன்று காரைக்குடி பகுதியில் இடியுடன் கூடிய தொடர் மழையால் உயர் அழுத்த மின்பாதைக்கு சற்று தள்ளி உள்ள

மரக்கிளைகள் மின்பாதையில் மழை மற்றும் காற்றினால் மின்தடை ஏற்பட்டது. அதை உடனே அப்புறப்படுத்தி மின்சாரம் சீராக வழங்கப்பட்டதாகவும் மேலும் எதிர்கால தேவை கருத்தில் கொண்டு ஏற்கனவே இருந்த 200 KVA மின்மாற்றி இருந்த மின்பளு 142–இல் KVA இருந்து 125 KVA குறைந்து புதிய மின் மாற்றி 63KVA அமைத்து அதில் மின்பளு மாற்றம் செய்து அதில் 43 KVA இணைக்கப்பட்டது என்றும் இந்த நடவடிக்கை சீரான மின்சாரம் வழங்க ஏற்பட்ட செயல் எனவும் மனுதாரர் குறிப்பிட்ட மின் இணைப்பு அமைந்துள்ள குடியிருப்பு வளாகத்தின் மற்ற வீடுகளில் குறைவழுத்த மின்சாரம் மற்றும் எந்த மின்சாதனங்களும் பாதிப்பு இல்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மேலும் இதற்கு சான்றாக அப்பகுதியின் குடியிருப்பின் மின் நுகர்வோர்கள் மழையின் காரணமாக 15.03.2023 மற்றும் 17.03.2023 அன்று தான் மின்தடை ஏற்பட்டதே அன்றி மற்ற நாட்களில் மின் தடையோ, குறைவழுத்த மின்சாரமோ இல்லை என்றும் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்றும் அதற்கு சான்றாக மற்ற நுகர்வோர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையை இணைத்து வாதிட்டார்.

7.5 மேலும் அந்த குடியிருப்பு பகுதியில் உள்ள அனைத்து மின் இணைப்புகளும் ஒரே மின்வாய் சட்டம் (Bus) மூலம் இணைக்கட்டுள்ளதால் குறைவழுத்த மின்சாரத்தால் மற்ற நுகர்வோரின் மின்சாதனங்கள் பழுதாகியிருக்க வேண்டும். அவ்வாறான நிகழ்வுகள் நடைபெறாத நிலையில் மேல்முறையீட்டாளர் வீட்டில் உள்ள கட்டமைப்பில் ஏற்பட்ட பழுதால் மட்டுமே மின்சாதனங்கள் பழுது ஏற்பட்டிருக்க வேண்டும். எனவே, மேல்முறையீட்டாளரின் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர் முறையிட்டார்.

7.6 மேற்கூறிய வாதங்களில் குறைந்த மின்னழுத்தம் இருந்ததாலும் மற்றும் மின்தடை ஏற்பட்டதாலும் மேல்முறையீட்டாளர் தெரிவித்த நிலையில் எந்த எந்த நாட்களில் எல்லாம் குறைந்த மின் அழுத்தம் இருந்தது என்று வினவிய பொழுது மேல்முறையீட்டாளர் பொதுவாகவே மின்னழுத்தம் குறைவாக இருப்பதாக வாதிட்டார். ஆனார் அவரால் குறிப்பிட்ட நாட்களில் குறைந்த மின்னழுத்தம் இருந்ததற்கான ஆவணங்களை இணைக்கவில்லை. மேலும் அவருடைய சாதனங்கள் பழுதானதற்கான ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை. மேலும், மின்தடை ஏற்பட்ட 15.03.2023

மற்றும் 17.03.2023 நாட்களில் மழையின் காரணமாக மரக்கிளை விழுந்து மின்தடை ஏற்பட்டதா என்று வினவிய பொழுது மேல்முறையீட்டாளர் அதை மறுக்கவில்லை.

7.7 மேலும் எதிர்மனுதாரர் இணைத்த ஆவணங்களை ஆய்வு செய்ததில் அந்த வளாகத்தில் உள்ள மற்றைய மின்நுகர்வோர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையில் அந்த வளாகத்தில் சீரான மின்சாரம் பெறப்பட்டு வருவதாகவும், எந்தவித வீட்டு மின்சாதனங்களுக்கு மின் அழுத்த பாதிப்பு ஏற்படவில்லை என அறிவதன் மூலமும் மற்றும் மேல்முறையீட்டாளரும் மற்ற நுகர்வோர்களும் அந்த குடியிருப்பு வளாகத்தில் ஒரே மின்வாய் சட்டத்தின் (Bus) மூலம் மின் இணைப்புகள் பெற்ற நிலையில், மேல்முறையீட்டாளருக்கு மட்டும் குறைந்த மின் அழுத்தம் ஏற்படுகின்றது என்ற வாதம் நிராகரிக்கப்படுகிறது.

7.8 மேலும் மேல்முறையீட்டாளர் அந்த வீட்டில் வாடகைதாரராக இருப்பதும், அவருடைய மின் இணைப்பு 402–004–1123–ல் RCD கருவி பொருத்தப்படவில்லை என்பதும் தெரியவருகிறது. இந்நிலையில் மேல்முறையீட்டாளர் குறைந்த மின்னழுத்தம் ஏற்பட்ட நாள் பற்றிய விவரம் தெரியாத நிலையில் 28.01.2024–லிருந்து 26.04.2024 வரையான கால கட்டத்தில் பதிவிறக்கம் செய்த மின் அளவியின் பதிவுகளை சமர்ப்பித்து மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பில் எந்த விதமான குறைந்த மின்னழுத்தமும் இல்லை என்று வாதிட்டதை கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. மேலும் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளர் கூறும் மின்சாதனங்கள் அவருடைய உள்கட்டமைப்பில் ஏற்பட்ட பழுதால் மட்டுமே ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற வாதம் மற்ற மின் நுகர்வோரிடமிருந்து எந்த விதமான புகார்களும் பெறப்படவில்லை என்பதால் ஏற்புடையதாக உள்ளது. மேலும், இதன் பொருட்டு விளக்கம் பெற தமிழ்நாடு மின்சார பகிர்மான விதி 30(1) ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது

> ***"30. நுகர்வோர் நிறுவல் அமைப்புகள்:***
>
> *1) நுகர்வோரின் நிறுவுகை, கம்பியடல் மற்றும் சாதனம் தொடர்பாக சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் அடங்கியுள்ள சட்டப்படியான வகைமுறைகளுக்கு இணங்கி நடப்பதற்கு ஏற்ப மாறாது ஒரே சீராக இருத்தல் வேண்டும். நுகர்வோரின் வளாகத்திலுள்ள சாதனங்களையும், கம்பியிடலையும் பராமரித்தல் அல்லது சோதனையிடல் பொறுத்த பொறுப்பு நுகர்வோரையேச் சார்ந்ததாகும்."*

மேற்கூறிய விதியின் படி மேல்முறையீட்டாளர் நிறுவிய அமைப்புகளில் ஏற்படும் பழுதை சரி செய்வது மேல்முறையீட்டாளரையே சாறும். எனவே, அதன் பொருட்டு நிவாரணம் வழங்க உரிமதாரரிடம் எழுப்பும் கோரிக்கை சரியாக இல்லாததால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. ஏற்கனவே மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தால் அவருடைய கோரிக்கை ஏற்கவில்லை என்ற நிலையில் மன்றம் வழங்கிய ஆணையில் மாற்றம் தேவையில்லை என்று ஆணையிடப்படுகிறது.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனுவின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 16/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு AR.பழனியப்பன், - <u>By RPAD</u>
D1 Block, கதவு எண் 397,
திருச்சி சுவாமிகள் அவென்யூ,
செக்கலை ரோடு, காரைக்குடி – 630 001,
சிவகங்கை மாவட்டம்.

2. செயற்பொறியாளர்/ பகிர்மானம்/காரைக்குடி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், கழனிவாசல், காரைக்குடி – 630 702.

3. உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/நகர்/காரைக்குடி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், கழனிவாசல், காரைக்குடி – 630 702.

4. மேற்பார்வை பொறியாளர், – By Email
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவகங்கை கலெக்டர் அலுவலகம், சிவகங்கை – 630 562.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.